1987 மார்ச் 5]

உதகையில் அருங்காட்சியகம்,

71—(* வினா எண் 9902) திரு. கே. உச்சி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகையில் நடப்பாண்டில் தொடங்கப்படவிருக்கும் அருங்காட்சியகத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) அதன் பணிகள் எப்போது துவங்கும்?

(இ) அருங்காட்சியகம் எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) உதகையில் அருங்காட்சியகம் ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட உள்ளது.

(ஆ&இ) 1986-87 ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தில் (PART II SCHEME) உதகை அருங்காட்சியகம் அமைப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தகுந்த கட்டிடம் கிடைத்தவுடன் அருங்காட்சியகம் செயல்படத் தொடங்கும்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்காலிகமாக ஒரு கட்டடத்தில் அதை ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு ஏற்கத் தயார்; காரணம், கட்டுவதற்குப் பல லட்ச ரூபாய்கள் செலவாகும். வாடகைக்கு இடம் பெற முயன்றால் செலவும் குறைவாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு இடம் கிடைக்க தக்கபடி உதவ வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்தக் கருத்தைத் தெரிவித்து அந்த அடிப்படையில் இடம் கிடைக்குமானால் உடனடியாகத் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிசை மாற்று வாரிய வீடுகள்.

72—(* வினா எண் 9324) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984-85-ல் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளுள் எத்தனை குடியிருப்போருக்கு சொந்தமாக்கப்பட்டது?

(ஆ) இந்த ஆண்டும் இத்திட்டம் தொடருமா?

(இ) அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1984-85-ல் கட்டப்பட்ட 2,000 குடியிருப்புகளில் 2 குடியிருப்புகள் தவணை முறையில் சொந்த மாக்கிக்கொள்ளும் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன.

(ஆ) இத்திட்டம் தொடரும்.

(இ) 1986–87-ல் 688 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப் பட்டுள்ளது. வாடகை முறையில் ஒதுக்கீடு பெறுவோர் விருப்பப் பட்டால், தவணை முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொடுக்கிற இந்தக் குடியிருப்புகள் என்ன விலைக்கு விற்கப்படுகின்றன? அவற்றின் கட்டுமான அடக்க விலை என்ன? அதனால் மக்களுக்கு நன்மை செய்யவேண்டு மென்பதால் அரசுக்கு ஏற்படுகிற இழப்பு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு வீடு சுமார் 20 ஆயிரம் ரூபாய் ஆகிறது. சொந்தமாக்கிக் கொள்கிற இந்தத் திட்டத்தின்கீழ் 25 ஆண்டுகளில் சொந்தமாகிறது. தரைத் தளத் திற்கு 45 ரூபாயும், முதல் தளத்திற்கு 40 ரூபாயும், இரண்டாவது தளத்திற்கு 35 ரூபாயும் மூன்றாவது தளத்திற்கு 30 ரூபாயும் அவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது. அவ்வாறு கட்டி விட்டால் 25 ஆண்டுகளிலே அந்தக் குடியிருப்புகள் அவர்களுக்குச் சொந்தமாகி விடுகின்றன.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஏழை மக்களின் நலிவு நீங்கக் கொண்டு வந்திருக்கிற இந்தத் திட்டத்தைச் சிலர் தவறாகப் பயன்படுத்துகிற முறையில் வீட்டை வாங்கி வேறு ஒருவருக்கு விற்றுவிட்டு மீண்டும் குடிசை மாற்று வாரியத்திடம் வீடு வேண்டு மென்று கேட்கிறார்களே, அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இந்தத் திட்டத்தை மற்ற மாவட்டத் தலைநகரங்களிலேயும் செயல்படுத்தும் திட்டம் உண்டா? அப்படியென்றால் எந்த எந்தத் தலைநகரங்களில் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல் சொந்தமாக்கிக் கொள்ள வீட்டைத் தரும்போது, அவர்கள் பணம் முழுவதும் முழுமை யாகக் கட்டிச் சொந்தமாக்கிக் கொள்ளும்வரை 25 ஆண்டுக் காலம் விற்கக் கூடாது. அப்படி அவர்கள் விற்பார்களானால், தகவல் வருகிறபொழுது குடிசை மாற்று வாரியம் உரிய நடவடிக்கை எடுத்து, அவற்றை ரத்து செய்து, மீண்டும் மற்றவர் களுக்கு ஒதுக்கீடு செய்கிறது.

1987 மார்ச் 5]

குடிசை மாற்று வாரியம் 1971-லே ஆரம்பிக்கப்பட்டதென்றாலும் சென்னை மாநகரத்திலே மட்டும்தான் அவர்களுடைய பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் திட்டத்தை இப்பொழுது சென்னை நகரத்திற்கு மட்டும் செயல்படுத்தினால் போதாது என்று சொல்லி, ஏறக்குறைய 46 நகரங்களுக்கு இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்திருக்கிறார்கள். ஆக, 209 மாவட்டங்களிலே 46 முனிசிபல் நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு அவற்றிலே இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன.

திரு. கூடலூர் இ.வி.வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் ஒளி விளக்காக விளங்கிக் கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதல்வர் ஆட்சியில் குடிசைப் பகுதியாக வாழ்ந்து கொண்டிருக்கிற கிராமப் பகுதிகளில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுமா? அதிலே, குறிப்பாக, வட்டாட்சியகம் இருக்கிற தலைமையகப் பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து, இந்த ஆண்டு பணிகள் துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன், சென்னையிலே மட்டும் நடைபெற்ற பணி, மாவட்ட அளவிலே 46 நகரங்களுக்கு இப்பொழுது விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. நிதிநிலைக்கேற்ப, கொஞ்சம் கொஞ்சமாக, எல்லாப் பகுதிகளிலும், தமிழகம் முழுவதும் இருக்கிற குடிசைவாசிகளுக்கு உதவ வேண்டுமென்பதுதான் புரட்சித் தலைவரின் எண்ணமாகும். எனவே, நிதிநிலைக்கேற்ப, கொஞ்சம் கொஞ்சமாக விரிவுபடுத்தப்படும்.

ஜெயங்கொண்டம் தொகுதி செங்குந்தபுரம் விசைத்தறிக் கூடம்.

73 —(* வினா எண் 9926) டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள செங்குந்தபுரம் விசைத்தறிக் கூடத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஜெயங்கொண்டம் தொகுதியிலேயே அரசுக்குச் சொந்தமான ஒரே ஒரு தொழிற்கூடம் என்று சொன்னால், இந்தச் செங்குந்தபுரம் விசைத்தறிக்கூடம் தான் 100 விசைத் தறிகளைக் கொண்டு இயங்கிக் கொண்டு வருகிறது. தற்போது அரசுக்கு இலாபகரமாக இருக்கிறது. அந்தப் பகுதி தொழில் வளத்திலே

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS